1970 ஆகஸ்ட் 26]

உரத்தைத் தான் அதிகமாக வாங்குகிறோம். ஆகவே, தமிழ் நாட்டிலேயே ஒரு உரத் தொழிற்சாலையை ஏற்படுத்தி, எளிய முறையில் உரம் கிடைக்கச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த அரசாங்கம் பொறுப் பேற்ற பிறகு, ஆட்சிக்கு வந்த பிறகு உரம் வாங்குவதற்கு ஆள் இல்லை, தேங்கிக் கிடக்கிறது என்ற குற்றச்சாட்டைத்தான் கேள்விப் பட்டிருக்கிறோம். இப்பொழுது அங்கத்தினர் சொல்வது புதிய தாக இருக்கிறது. நம்முடைய அரசு இதில் தயக்கம் காட்ட வில்லை. மெட்ரூஸ் பெர்டிலைஸர்சில் அடுத்த ஆண்டு உற்பத்தி தொடங்கப்பட்டுவிடும். தூத்துக்குடித் தொழிற்சாலையைப் பொறுத்த அளவில் நாப்தா என்ற மூலப் பொருள் கிடைக்கிற பிரச்சனை மத்திய அரசாங்கத்தோடு விவாதத்தில் இருக்கிறது. இன்று இரவு அதைப்பற்றியும் நம்முடைய முதல் அமைச்சர் அவர் கள் பிரதம அமைச்சரோடு பேச இருக்கிறார்கள். தூத்துக்குடித் தொழிற்சாலையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ரூ. 52 கோடிக்கு திட்டம் போட்டு, ஏராளமான உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இப்பொழுதே இருக்கிறது.

திருப்பத்தூர் அருகே மைகாத் தகடு சுரங்கம்

* 48 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத் திருப்பத்தூர் அருகில் மைக்காத் தகடு எடுக்கும் சுரங்க வேலைக்காக எத்தனை ஏக்கரா நிலம் எவ் வளவு தொகைக்கு வாங்கப்பட்டது?

(இ) அவ்வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்திலுள்ள செவத்தூர், எலவம்பட்டி எனும் இரு கிராமங்களிலிருந்து 52.76 ஏக்கரா பட்டா நிலங்களை ரூ. 1,16,131.08 (ரூபாய் ஒரு லட்சத்துப் பதினாறாயிரத்து நூற்று முப்பொத்தொன்றும் பைசா எட்டும்) க்கு சுரங்க வேலைக்காக வாங்கப்பட்டது.

(இ) அடுத்த மூன்று மாத காலத்திற்குள் சுரங்க வேலை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான துவக்க ஏற் பாடுகள் யாவும் முன்னரே மேற்கொள்ளப்பட்டு நடந்து கொண்டி ருக்கின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதற்காக வேண்டி ஒதுக்கப் பட்டுள்ள மூலதனம் எவ்வளவு? இன்னும் எவ்வளவு தினங்களில் அடிப்படையான வேலைகள் முடிந்து, இந்த சுரங்கவேலை ஆரம்பிக் கப்படும் என்பதைக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுரங்க வேலை ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. வெர்மிகுலேட் என்ற பொருள் திருப்பத்தூருக்குப் பக்கத்து கிராமங்களில்

கிடைக்கிறது. நம்முடைய சென்னைக்குப் பக்கத்தில் எக்ஸ்ஃபோலியேஷன் பிளாண்டு, அதாவது உஷ்ணத்தை வழங்கினால் விரிவடையக்கூடிய பொருளை உற்பத்தி செய்வதற்கு ரூ. 3¾ லட்சம் செலவில் நாம் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு முடிவு செய்திருக்கிறோம். அந்தத் தொழிலுக்குத் தேவையான வெர்மிகுலேட் என்ற பொருள் வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூருக்குப் பக்கத்தில் உள்ள இரண்டு கிராமங்களிலிருந்து சென்னைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறைவலவர்கள், பயணித் துணைவர்களின் சம்பளவீதம்.

■ 49 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழக அரசு போக்குவரத்தில் பணியாற்றும் வலவர்கள் (Drivers), கண்டக்டர்களின் சம்பளத்தை உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரசினால் நியமிக்கப்பட்ட இரண்டாவது சம்பள ஆணைக்குழு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறையில் பணிபுரியும் பயணித் துணைவர்கள் (Conductors), வலவர்கள் (Drivers) ஆகியோரது சம்பள விதங்களையும் மறு ஆய்வு செய்து, எல்லா சம்பள விதங்களின் அமைப்பையும் சீரமைப்பது குறித்து அரசிற்குப் பரிவுரை வழங்கும்.

DR. H. V. HANDE: In view of the fact that there is lot of misunderstanding between conductors and passengers because on the one hand, the conductors feel that they cannot look after more than 25 passengers and on the other hand, the passengers have got to enter the bus somehow or other to go to their offices in time, will the Government, without waiting for the report of the Second Pay Commission, come forward to grant something extra for conductors if more passengers were taken, if they could give them some sort of bonus to conductors to act as an incentive to them and so that incidentally more passengers may also travel in the buses?

THE HON THIRU S. J. SADIQ BASHA: As a matter of fact, the High Power Committee has suggested in its recommendation relating to revision of scales of pay of employees of State Transport Department that it should be implemented only after the overall financial position of the undertaking has improved. Government without waiting for the Department to convert itself from a losing concern into a profitable one have decided that the scales of pay of the Transport Department's employees should be referred to the Pay Commission. அரசாங்க ஹை பவர் கமிட்டி போக்குவரத்துத் துறை நிதிநிலைமையைச் சரிக்கட்டிய பிறகுதான் சம்பள உயர்வு பற்றிய பிரச்சனை கவனிக்கப்படும் என்று சொல்லி